**நம்மாழ்வார் அருளிச் செய்த**
**திருவாய்மொழி**
**நான்காம் பத்து**

## எட்டாம் திருவாய்மொழி - ஏறாளும்
**ஆழ்வார் 'எம்பெருமான் வேண்டாத என் உயிரும் உடைமைகளும் எனக்கும் வேண்டா' என்று தலைவி பாசுரத்தால் பேசுதல்**

** ஏறாளும் இறையோனும் *
திசைமுகனும் திருமகளும் *
கூறாளும் தனி உடம்பன் *
குலங்குலமா அசுரர்களை **
நீறாகும்படி ஆக *
நிருமித்துப் படை தொட்ட *
மாறாளன் கவராத *
மணி மாமை குறைவிலமே 1

மணி மாமை குறைவில்லா *
மலர் மாதர் உறை மார்பன் *
அணிமானத் தட வரைத் தோள் *
அடல் ஆழித் தடக் கையன் **
பணி மானம் பிழையாமே *
அடியேனைப் பணி கொண்ட *
மணி மாயன் கவராத *
மட நெஞ்சால் குறைவிலமே 2

மட நெஞ்சால் குறைவில்லா *
மகள் தாய் செய்த ஒரு பேய்ச்சி *
விட நஞ்ச முலை சுவைத்த *
மிகு ஞானச் சிறு குழவி **
பட நாகத்தணைக் கிடந்த *
பரு வரைத் தோள் பரம்புருடன் *
நெடு மாயன் கவராத *
நிறைவினால் குறைவிலமே 3

நிறவ்யினால் குறைவில்லா *
நெடும் பணைத் தோள் மடப் பின்னை *
பொறையினால் முலை அணைவான் *
பொரு விடை ஏழ் அடர்த்து உகந்த **
கறையின் ஆர் துவர் உடுக்கை *
கடையாவின் கழிகோல் கை *
சறையினார் கவராத *
தளிர் நிறத்தால் குறைவிலமே 4

தளிர் நிறத்தால் குறைவில்லாத் *
தனிச் சிறையில் விளப்புற்ற *
கிளி மொழியாள் காரணமாக் *
கிளர் அரக்கன் நகர் எரித்த **
களி மலர்த் துழாய் அலங்கல் *
கமழ் முடியன் கடல் ஞாலத்து *
அளிமிக்கான் கவராத *
அறிவினால் குறைவிலமே 5

அறிவினால் குறைவில்லா *
அகல் ஞாலத்தவர் அறிய *
நெறி எல்லாம் எடுத்து உரைத்த *
நிறை ஞானத்து ஒரு மூர்த்தி **
குறிய மாண் உருவாகிக் *
கொடுங்கோளால் நிலம் கொண்ட *
கிறி அம்மான் கவராத *
கிளர் ஒளியால் குறைவிலமே 6

கிளர் ஒளியால் குறைவில்லா *
அரி உருவாய்க் கிளர்ந்து எழுந்து *
கிளர் ஒளிய இரணியனது *
அகல் மார்பம் கிழித்து உகந்த **
வளர் ஒளிய கனல் ஆழி *
வலம்புரியன் மணி நீல *
வளர் ஒளியான் கவராத *
வரி வளையால் குறைவிலமே 7

வரி வளையால் குறைவில்லாப் *
பெரு முழக்கால் அடங்காரை *
எரி அழலம் புக ஊதி *
இரு நில முன் துயர் தவிர்த்த **
தெரிவரிய சிவன் பிரமன் *
அமரர் கோன் பணிந்து ஏத்தும் *
விரி புகழான் கவராத *
மேகலையால் குறைவிலமே 8

மேகலையால் குறைவில்லா *
மெலிவுற்ற அகல் அல்குல் *
போக மகள் புகழ்த் தந்தை *
விறல் வாணன் புயம் துணித்து **
நாக மிசைத் துயில்வான் போல் *
உலகெல்லாம் நன்கு ஒடுங்க *
யோகு அணைவான் கவராத *
உடம்பினால் குறைவிலமே 9

உடம்பினால் குறைவில்லா *
உயிர் பிரிந்த மலைத் துண்டம் *
கிடந்தன போல் துணி பலவா *
அசுரர் குழாம் துணித்து உகந்த **
தடம் புனல சடை முடியன் *
தனி ஒரு கூறு அமர்ந்து உறையும் *
உடம்பு உடையான் கவராத *
உயிரினால் குறைவிலமே 10

** உயிரினால் குறைவில்லா *
உலகேழ் தன்னுள் ஒடுக்கி *
தயிர் வெண்ணெய் உண்டானைத் *
தடங்குருகூர்ச் சடகோபன் **
செயிர் இல் சொல் இசை மாலை *
ஆயிரத்துள் இப்பத்தால் *
வயிரம் சேர் பிறப்பு அறுத்து *
வைகுந்தம் நண்ணுவரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---